**செய்தி வெளியீடு எண்.25** **நாள்.13.1.2009**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 12.1.2008 அன்று புத்துணர்வோடு கொண்டாடுவோம் பொங்கல் விழாவை! என்று தெரிவித்து, **கிராமப்புறங்களிலும், நகரங்களிலும், வீடுகள்தோறும், அரசுக் கட்டடங்கள் அனைத்திலும் பொங்கல் நாளன்று வண்ண வண்ணமாய்ச் சரவிளக்குகள் அமைத்து எழில் குலுங்கிடச் செய்திடுவீர்** என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்படி அரசு கட்டடங்கள் மற்றும் தனியார் வீடுகள், வணிக வளாகங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

**கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும், சென்னையில் அரசு கட்டடங்களான, தலைமைச் செயலகம் காமராஜர் சாலையில் அமைந்துள்ள எழிலகம் , பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகம் செம்மொழி ஆய்வு நிறுவனம், தலைமை காவல் இயக்குநரகம், பத்திரப் பதிவு தலைமை அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள இராஜாஜி மண்டபம், கலைவாணர் அரங்கம், சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம் சட்டமன்ற தொகுதி அலுவலகம், மற்றும் சட்டமன்ற உறுப்பினர் விடுதி , மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இல்லம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இல்லம், காந்தி மண்டபம், இராஜ்பவன், வள்ளுவர் கோட்டம் திருவல்லிக்கேணி அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை தாடண்டர் நகர் சமுதாயக் கூடம், சைதாப்பேட்டை அரசினர் மருத்துவமனை மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் துறை அலுவலகம், தேனம்பேட்டை கீழ்ப்பாக்கம் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி, அரசு அருங்காட்சியகம், எழும்பூர், மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், எழும்பூர் கண் மருத்துவமனை, செயற்கை கால் பொருத்தும் மருத்துவமனை, கே.கே.நகர், அரசு மருத்துவமனை, கே.கே.நகர், வட்டார**

**போக்குவரத்து அலுவலகம், கே.கே.நகர் மனநோய் மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் பெரியார் நகர் அரசு மருத்துவமனை, ஓட்டேரி நெஞ்சக நோய் மருத்துவமனை சேத்துப்பட்டு நெஞ்சக நோய் மருத்துவமனை, சேத்துப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம், அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனை மற்றும் இந்திய முறை மருத்துவமனை, அண்ணாநகர், மருத்துவக் கல்வி இயக்குநரகம், கீழ்ப்பாக்கம், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரசு ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, இராயபுரம், தண்டையார்பேட்டை அரசு மருத்துவமனை, பெரம்பூர் வட்டார அரசு மருத்துவமனை, வட்டாட்சியர் அலுவலகம், பெரம்பூர், பத்திரப் பதிவு அலுவலகம், ஜார்ஜ் டவுன், பள்ளிக் கல்வி இயக்கக வளாகம், ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை போன்ற அரசு கட்டடங்கள் வண்ண விளக்குகளாலும், தோரணங்களாலும், தென்னை, வாழை, ஈச்சங்க குலைகளும், தோகை விரிந்த கரும்புகளும், இஞ்சி மஞ்கள் கொத்துகளும் இன்னபிறவும் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.